# குளித்தலை நகராட்சி

28.02.2019.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பிப்ரவரி–2019.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி–2019.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி ஐ.யு.டி.எம்.2018–2019 திட்டத்தின்கீழ், குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சிக்கு 20KLD திறன் உள்ள கழிவு கசடு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) குளித்தலை நகராட்சிக்குரிய சத்தியமங்கலம் உரக்கிடங்கில் அமைக்கப்பட உள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள மாசு கட்டுப்பாட்டு வாரியம், கரூர் அலுவலகத்தின் அனுமதி பெற ரூ.35,800/–ஐ, கோட்ட செயற்பொறியாளர் பெயரில் (DEE) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று, பொது நிதியிலிருந்து ரூ.35,800/– வழங்கி செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.3657/2018/இ1)

பொருள்– 04. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிப்பதற்க்கு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சாக்கடை மற்றும் கழிவுநீர் தேக்கங்களில் கொசு புழு மருந்து தெளிக்க வேண்டி உள்ளது. ஆதலால் கை தெளிப்பான் 6 எண்ணிக்கை வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் மேற்கொள்ள இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.257/2019/எச்1)

பொருள்– 05. இந்நகராடசி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கூரூ–47–ஹளு–5370 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுதுநீக்கம் செய்வதற்கு மன்ற தீர்மானம் எண்.100, நாள்–15.05.2018.ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | செலவினம் |
|---|---|---|
| 1. | JANATHA AUTO DIESEL WORK,<br>32/A, Pookkollaistreet, Tanjore Road, Trichy – 620 008. | 79856.00 |
| 2. | DOMINIC AUTO GARAGE, 23, Anbil Dharmalingamnagar,<br>Edamalaipattipudur, Trichirappalli – 620 012. | 88480.00 |

மேற்காணும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும், இச்செலவினப்பட்டியல் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4681/2018/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு திட்ட மதிப்பீடு, அறிக்கை, வரைபடங்கள், புகைப்படங்கள் தயாரிக்க தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் பணி மேற்கொண்டதன் செலவின பட்டியல்கள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | தமிழரசன் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனம், குளித்தலை | |
|---|---|---|---|
| | | பட்டியல் எண் / நாள் | தொகை (ரூ.) |
| 1. | குளித்தலை நகராட்சி IUDM 2018–2019ம் ஆண்டு தார்சாலை மேம்பாட்டு பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் தொழில்நுட்ப அனுமதி பெற அனுப்புவதற்கு திட்ட அறிக்கை, தட்டச்சு, வரைபடங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை தயாரித்ததற்கான பட்டியல் தொகை (இ1/2251/18) | 12 / 24.12.2018 | 21000.00 |
| 2. | குளித்தலை நகராட்சியின் அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து தட்டச்சு வரைபடங்கள் தயாரித்ததன் பட்டியல் தொகை (இ1/2884/17) | 65 / 24.12.2018 | 6100.00 |
| 3. | குளித்தலை நகராட்சியில் இரண்டு இடங்களில் நுண் உரக்கிடங்கு அமைத்தல் பணிக்கா பவர்பாயிண்ட் 6 எண்ணிக்கையில் கலர் புத்தக வடிவிலான ஆவணங்கள் தயார் செய்து கொடுத்ததன் பட்டியல் தொகை (இ1/1389/18) | 50 / 24.12.2018 | 9500.00 |
| 4. | தூய்மை இந்தியா திட்டத்தின் நுண் உரக்கிடங்குகள் இரண்டு அண்ணாநகர், ஜெய்மகால் அவென்யூ ஆகிய பகுதிகளில் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கான விரிவான திட்ட அறிக்கை, தட்டச்சு, வரைபடங்கள், புகைப்படங்கள் தயாரித்து கொடுத்ததன் பட்டியல் தொகை (இ1/1389/18) | 36 / 24.12.2018 | 11600.00 |
| 5. | குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் நகராட்சி உரக்கிடங்கில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான தட்டச்சு, வரைபடங்கள் மற்றும் புகைப்படங்கள் தயாரித்ததற்கான பட்டியல் தொகை (இ1/1387/18) | 23 / 24.12.2018 | 32000.00 |
| 6. | குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் நகராட்சி உரக்கிடங்கில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான புதிய வடிவமைப்பு தயாரித்து, அதற்குரிய விரிவான திட்ட அறிக்கை தட்டச்ச, புகைப்படங்கள், வரைபடங்கள் 42 எண்ணிக்கைகள் தயாரித்து கொடுத்ததற்கான பட்டியல் தொகை (இ1/1387/18) | 81 / 24.12.2018 | 24000.00 |

மேற்கண்ட விபரப்படி பணிகளுக்கான பட்டியல் தொகை ரூ.104200/– (ரூபாய் ஒரு லட்சத்து நான்காயிரத்து இருநூறு மட்டும்) தமிழரசன் கம்ப்யூட்டர்ஸ் நிறுவன உரிமையாளர் திரு.லோகநாதன் என்பவருக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு புதுப்பிக்கப்பட வேண்டியதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | காலம் | தொகை |
|---|---|---|---|
| 1. | குடிநீர் பிரிவு ஈப்பு TN-47-X-3173 | 14.01.2019 முதல் 13.01.2020 வரை | ரூ.12,956/– |
| 2. | குடிநீர் லாரி TN-47-E-0264 | 17.02.2019 முதல் 16.02.2020 வரை | ரூ.17,467/– |

மேற்படி வாகனங்களின் ஆயுள் காப்பீட்டினை உரிய கட்டணம் செலுத்தி புதுப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று, குடிநீர் பிரிவு ஈப்பு TN-47-X-3173.ன் ஆயுள்காப்பீட்டு தொகை ரூ.12,956/–ஐ, செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று, குடிநீர் லாரி TN-47-E-0264.ன் ஆயுள்காப்பீட்டு தொகை ரூ.17,467/–ஐ, செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.4599/2018/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் 24 வார்டுகளிலும் சுத்திகரிக்கப்பட்ட தானியங்கி சமுதாய குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 20.12.2018.ல் வெளியிடப்பட்டதற்கான விளம்பர கட்டண பட்டியல் நாள்–24.12.2018.ன்படியான தொகை ரூ.1,34,295/–ஐ, அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்சிஸ் நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3114/2018/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சிப் பகுதியில் சொத்துவரி விதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் (5500 எண்ணிக்கை) பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்குதல் பணிக்கு, ரூ.1.92 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.12.2018 அன்று ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 22.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் சொத்துவரி விதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் (5500 எண்ணிக்கை) பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி | திரு.S.கந்தசாமி, பசுபதிபாளையம், கரூர் – 639 004 | தொழில்நுட்ப தகுதியற்றது. |
| | | திரு.M.ராமசாமி, B.E., ஒப்பந்தாரர், கே.பிச்சம்பட்டி அஞ்சல், வெள்ளியணை, கரூர் – 639 118. | 4.98 % அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித ஒப்பந்தப்புள்ளி 28.01.2019.ல் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்பு செய்து கொடுக்கும்படி (Negotiation), குறைந்த ஒப்பந்தப்புள்ளி 8.04% மதிப்பீட்டைவிட அதிகமான விலை விகிதம் வழங்கிய திரு.M.ராமசாமி, வெள்ளியணை, கரூர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 28.01.2019 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, திரு.M.ராமசாமி, ஒப்பந்ததாரர் 29.01.2019 தேதியில் இனம் எண். 1.1, 1.2 மற்றும் 1.3 ஆகியவற்றில் விலை குறைப்பு செய்ய சம்மதித்து விலை குறைவு கடிதம் வழங்கினார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், மதிப்பீட்டுக்கு 4.98% கூடுதலாக இருந்தது. மேலும், கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியார்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர் கூலியேற்றத்தினாலும், மதிப்பிட்டிற்கு 4.98% கூடுதலாக வழங்கியுள்ள திரு.M.ராமசாமி, ஒப்பந்ததாரர், வெள்ளியணை, கரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.2884/2017/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 பயோமைனிங் முறையில் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிக்கு இயக்கப்படும் இயந்திரங்களுக்கு 75 KWLTCT மின்பளு உடைய புதிய மின் இணைப்பு பெறவேண்டி உள்ளது. அதற்கான பதிவு கட்டணம் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.80,430/–ஐ, SE, KEDC, தமிழ்நாடு மின்சார வாரியம், கரூர் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ரூ.45,059/– மற்றும் ரூ.35,371/– ஆகிய தவணைகளில் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கு கட்டணம் செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.3341/2018/இ1)

| | |
|---|---|
| பொருள்– 11. | குளித்தலை நகராட்சிப் பகுதியில் சொத்துவரி விதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்குதல் பணிக்கு, 22.01.2019 தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 25.12.2018.ல் வெளியிடப்பட்டதன் பட்டியல் நாள்–28.12.2018 அக்கார்ட் விளம்பர நிறுவனத்தாரருக்கு ரூ.59,745/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு– | 1). அனுமதி வழங்கலாம்.<br>2). செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2884/2017/இ1) |

*******

# குளித்தலை நகராட்சி

28.02.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 19 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 20 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 21 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 22 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 5 | 5 | 23 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 24 | பதிவு செய்யப்பட்டது. |
| 7 | 7 | 25 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 26 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 9 | 9 | 27 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 28 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 29 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.